**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.ஏ.,பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2023–ஆம் வருடம் ஜுன் மாதம் 12 ஆம் நாள் திங்கட்கிழமை**

**I.A.No.192/2023**

**in**

**Original Suit No.1294/2022**

**(CNR No.TNDG19-004312-2022)**

----

1. தியாகராஜன் (இறப்பு)
2. முத்துலெட்சுமி (இறப்பு)
3. V.R.எழிலரசி
4. கலையரசி
5. T. ராம அருள் அரசன்
6. மங்கையற்கரசி
7. T. செந்தில் ஒளி அரசன் ...... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சேனாதிபதி
2. குணசேகரன்

...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.1294/2022–இல் இ.ம.எண்.192/2023 ஆக கடந்த 07.03.2023 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.டி.திருமலைசாமி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம்

வழங்கலான,

<u>**உத்தரவு**</u>

**1.** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1–இன் சாட்சியத்தை நீக்கறவு (Struck Off) செய்து உத்தரவிட்டு புதிய நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–இன் கீழ் மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம். :–**</u>

5 ஆம் மனுதாரர், அசல்வழக்கில் 5 ஆம் வாதி என்றும், 3, 4 மற்றும் 6, 7 மனுதாரர்கள், 5 ஆம் மனுதாரரின் சகோதர மற்றும் சகோதரிகள் என்றும், மனுதாரர்களின் தகப்பனாரான முதல்வாதி அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல்வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு மனுதாரர்களின் தகப்பனார் இறந்துபோய்விட்டார் என்றும், மனுதாரர்கள், அவர்களின் தகப்பனாரான தியாகராஜனின் வாரிசுகள் என்ற அடிப்படையில் அசல்வழக்கை நடத்தி வருவதாகவும், அசல்வழக்கு நிலுவையில் இருந்தபோது அசல்வழக்கு எண்.750/2022 (பழைய எண்.404/2019)–இன் 7 மற்றும் 8 பிரதிவாதிகள் சேனாதிபதி மற்றும் குணசேகரன் ஆகியோர்கள் மாண்பமை திண்டுக்கல் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் அசல்வழக்கை பழனி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.எண்.750/2022 மற்றும் 534/2018 ஆகிய வழக்குகளுடன் சேர்ந்து நடத்துவதற்கு மாற்றுதல் செய்து உத்தரவிட வேண்டி மனுத்தாக்கல் செய்து திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றம் கடந்த 05.08.2021 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின்பேரில் இந்த அசல்வழக்கு பழனி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுடன் சேர்ந்து நடத்துவதற்கு மாற்றம் செய்யப்பட்டு சேர்த்து

நடத்தப்பட்டு வருவதாகவும், மேற்படி அசல்வழக்குகள் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அ.வ.எண்.1294/2022, 1367/2022 மற்றும் 750/2022 என்ற புதிய எண்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அசல்வழக்கு எண்.54/2009 ஆக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஒட்டன்சத்திரத்தில் நிலுவையில் இருந்தபோது 5 ஆம் மனுதாரர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து பகுதியாக குறுக்குவிசாரணை செய்யபபட்டு இருந்த நிலையில் மூன்று வழக்குகளையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது, மூன்று வழக்குகளையும் சேர்ந்து விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டதின்பேரில் மனுதாரர்கள் தரப்பில் மூன்று வழக்குகளில் சொல்லியுள்ள பொருண்மைகள் குறித்து தெரிவித்து புதியதாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என்றும், ஆகவே அசல்வழக்கு எண்.54/2009 புதிய வழக்கு எண்.1294/2022–இல் ஏற்கனவே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சாட்சியத்தை இரத்து (Struck Off) செய்து புதிய நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்ய தாக்கல் செய்துள்ளதாகவும், அவ்வாறு இரத்து செய்து உத்தரவிடப்படவில்லை எனில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே அசல்வழக்கு எண்.1294/2022 (பழைய எண்.54/2009)–இல் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வா.சா.1 சாட்சியத்தை நீக்கறவு (Struck Off) செய்து புதிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டி மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

<u>3. 1 ஆம் எதிர்மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தழுவி ஏற்றுக்கொள்வதாக மேற்குறிப்பு செய்யப்பட்ட எதிர்மனு உரையின் சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படியும், சங்கதிகள்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், இந்த எதிர்மனுதாரர்களால் வெளிப்படையாக

ஒப்புக்கொள்ளும் விபரங்களை தவிர மற்ற விபரங்களை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், அசல்வழக்கு எண்.54/2009 ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கோப்பில் இருந்து மாண்பமை திண்டுக்கல் மாவட்ட நீதிமன்ற உத்தரவின்படி பழனி சார்பு நீதிமன்றத்திற்கும், பின்னர் ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.1294/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டும், அசல்வழக்கு எண்.750/2022 (பழனி சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.404/2019) மற்றும் அசல்வழக்கு எண்.1367/2022 (பழனி சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.534/2018) ஆகியவற்றோடு சேர்த்து விசாரிக்க மாற்றுதல் மனு எண்.42/2021–இல் ஏற்பட்ட உத்தரவின்படி சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 5 ஆம் வாதி தம்மை வா.சா.1 ஆக முன்னிலைப்படுத்தி முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல்வழக்கு எண்.1294/2022 ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.54/2009 என விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதும் 5 ஆம் மனுதாரர்/5 ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரை குறியீடு செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1–யை பகுதி விசாரணை செய்யப்பட்டுள்ளார் எனவும், அசல்வழக்கு எண்.750/2022–இல் நானும், தனது சகோதரர் குணசேகரனும் 7, 8 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாத உரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மற்றொரு வழக்கான அ.வ.எண்.1367/2022–யையும், மனுதாரர்கள், வாதிகளாக இருந்து தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர் என்றும், இந்த தாவாவில் முதல்நிலை சாட்சியம் பதிவு செய்யப்பட்டும், ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், ஒரு பகுதி குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி மனுதாரரின் சாட்சியத்தை நீக்கறவு செய்ய எந்தவொரு

வழிமுறையோ, முகாந்திரமோ இல்லை என்றும், மனுதாரர்/வாதி ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சிய வாக்குமூலம் மற்றும் வழக்குரைகளில் தங்கள் தரப்பில் ஏற்பட்டுவிட்ட குறைகளையும், பாதகமான அம்சங்களையும் சரிசெய்து கொள்வதற்காகவே (Picking the holes) தமது முந்தைய சாட்சியத்தை ரத்து செய்யும்படி (Struck Off) கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள முதல்நிலை வாக்குமூலத்தில் ஏற்கனவே தான் சாட்சியம் அளித்ததை பற்றியோ, அதில் தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பற்றியோ விபரங்களையோ எவ்வித தகுந்த முகாந்திரமுமின்றி ரத்து செய்தால் பெருத்த அநீதியும், நீதிக்கும் குந்தகமும் தங்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்பட்டுவிடும், மனுதாரர்கள் தரப்பில் என்ன காரணத்திற்காக ஏற்கனவே உள்ள சாட்சியத்தை ரத்து செய்ய வேண்டுமென்றோ, அப்படியே கோப்பில் வைத்துக்கொண்டு மேற்கொண்டு கூடுதல் விபரங்களை கூடுதல் சாட்சியம் விசாரிப்பதால் என்ன தீங்கு அல்லது என்ன சட்டமுரண்பாடு ஏற்பட்டுவிடும் என்பது பற்றியோ மனுவில் எந்தவித குறிப்பும் இல்லை, மனுதாரர் கெட்ட உள்நோக்கத்தோடு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக தெரிகிறது என்றும், எனவே மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டுமென்று தெரிவித்து எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**<u>6. பிரச்சனைக்குரிய தீர்வு :–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல்வழக்கு எண்.54/2009–இல் விசாரிக்கப்பட்ட வா.சா.1–இன் சாட்சியத்தை (Struck off) நீக்கறவு செய்து உத்தரவிட்டு புதிய நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டி மனுதாரர்கள், இந்த மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**7.** மனுவுடன் கூடிய பிரமாணப்பத்திரிக்கையில் மனுதாரர்களின் தகப்பனாரான இறந்துபோன முதல்வாதி அசல்வழக்கை தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு மனுதாரர்களின் தகப்பனார் இறந்துபோய்விட்டார் என்றும், மனுதாரர்கள் அவர்களின் தகப்பனாரான இறந்துபோன முதல்வாதியின் வாரிசுகள் என்ற அடிப்படையில் அசல்வழக்கை நடத்தி வருவதாகவும், அசல்வழக்கு எண்.1294/2022 (பழைய எண்.54/2009) நிலுவையில் இருந்தபோது அசல்வழக்கு எண்.750/2022 (பழைய எண்.404/2019)–இன் 7 மற்றும் 8 பிரதிவாதிகள் சேனாதிபதி மற்றும் குணசேகரன் ஆகியோர்கள் திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.1294/2022–யை (பழைய எண்.54/2009) பழனி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த அசல்வழக்கு எண்.750/2022 (பழைய எண்.404/2019) மற்றும் அசல்வழக்கு எண்.534/2018 ஆகிய வழக்குகளுடன் சேர்ந்து நடத்துவதற்கு மாற்றுதல் செய்து உத்தரவிட வேண்டி மனுத்தாக்கல் செய்து திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றம் 05.08.2021 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவின்பேரில் அசல்வழக்கு எண்.1294/2022–யை (பழைய எண்.54/2009) பழனி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுடன் சேர்ந்து நடத்துவதற்கு மாற்றம் செய்து உத்தரவிட்டதின்பேரில்

மூன்று வழக்குகளும் சேர்ந்து நடத்தப்பட்டு வருவதாகவும், மேற்படி மூன்று வழக்குகளும் ஆள்வரை எல்கையின் காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அசல்வழக்கு எண்கள்.1294/2022, 1367/2022 மற்றும் 750/2022 என்ற புதிய வழக்கு எண்கள் கொடுக்கப்பட்டு கோப்பில் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அசல்வழக்கு எண்.54/2009 ஆக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஒட்டன்சத்திரத்தில் நிலுவையில் இருந்தபோது 5 ஆம் மனுதாரர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டு இருந்த நிலையில் மூன்று வழக்குகளையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டதின்பேரில் மனுதாரர்கள் தரப்பில் மூன்று வழக்குகளில் சொல்லியுள்ள பொருண்மைகள் குறித்து குறிப்பிட்டு புதியதாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே அசல்வழக்கு எண்.1294/2022 (பழைய வழக்கு எண்.54/2009) வா.சா.1–இன் சாட்சியத்தை நீக்கறவு (Struck Off) செய்து புதிய பிரமாண வாக்குமூலத்தை அனுமதியளித்து உத்தரவிட வேண்டி மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8.** எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரையில் மனுதாரர்கள் ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.54/2009–இல் கோப்பில் இருந்து பின்னர் மாவட்ட நீதிமன்ற உத்தரவின்படி பழனி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது, பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு சமூகம் நீதிமன்றம் அசல்வழக்கு எண்.1294/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டும், பழனி சார்பு நீதிமன்ற அசல்வழக்குகள் இந்நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.750/2022 (பழனி சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.404/2019) மற்றும் அசல்வழக்கு எண்.1367/2022 (பழனி சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.534/2018) ஆகியவற்றுடன் சேர்த்து

விசாரிக்க மாற்றுதல் மனு T.R.No.42/2021–இல் ஏற்பட்ட உத்தரவின்படி சமூகம் வழக்குகள் மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் கோப்பில் எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் 5 ஆம் மனுதாரர்/5 ஆம் வாதி புதிதாக பிரமாணப்பத்திரிக்கை முதல்விசாரணைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே வழக்கின் முதல்நிலை சாட்சியம் செய்யப்பட்டும், ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், பகுதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரரின் சாட்சியத்தை நீக்கறவு செய்ய கோருவதற்கு எந்தவொரு வழிமுறைகளோ, முகாந்திரங்களோ இல்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சிய வாக்குமூலத்தில் மற்றும் வழக்குரைகளில் உள்ள குறைகளையும், பாதகமான அம்சங்களையும் சரி செய்து கொள்வதற்காகவே மனுதாரரின் முந்தைய சாட்சியத்தை ரத்து செய்யும்படி கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் என்ன காரணத்திற்காக ஏற்கனவே உள்ள சாட்சியத்தை ரத்து செய்ய வேண்டுமென்றோ, எந்த காரணத்தையும் தெரிவிக்கவில்லை, அசல்வழக்குகளை இழுத்தடித்து காலம் கடத்துவதற்காகவே மனுதாரர்கள் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.** இந்நிலையில் மேற்கண்ட பொருண்மைகளை பரிசீலிக்கையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.54/2009–யை மனுதாரர்களின் தகப்பனாரால் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்களின் தகப்பனாரின் இறப்பிற்கு பின்பு அவர்களின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வழக்கை நடத்தி வருவதாகவும், மனுதாரர்கள் தரப்பில் அசல்வழக்கு

எண்.404/2019 மற்றும் 534/2018 ஆகிய வழக்குகளை பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்துள்ளது என்பதும், அசல்வழக்கு எண்.404/2019–இன் 7, 8 பிரதிவாதிகள் ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல்வழக்கு எண்.54/2009–யை பழனி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து பழனி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுடன் சேர்ந்து விசாரிக்க மாற்றம் செய்து உத்தரவிட கோரி திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு அசல்வழக்கு எண்.54/2009, பழனி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர்கள் அசல்வழக்கு எண்.54/2009 ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 5 ஆம் மனுதாரர்/5 ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார் என்பதும், அசல்வழக்குகள் நீதிமன்ற ஆள்வரை எல்கையின் காரணமாக இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு அ.வ.எண்.1294/2022 (பழைய அ.வ.எண்.54/2009), அ.வ.எண்.750/2022 (பழனி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.404/2019), அ.வ.எண்.1367/2022 (பழனி சார்பு நீதிமன்ற வழக்கு எண்.534/2018) என்ற வழக்கு எண்கள் கொடுக்கப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்பதும், அசல்வழக்கு எண்.1294/2022–இல் திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் மாற்றுதல் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பு 5 ஆம் மனுதாரர்/5 ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளார் என்பதும், மனுதாரர்கள் தரப்பில் புதிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

**10.** இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் அசல்வழக்கு எண்.1294/2022–இல் ஒட்டன்சத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.54/2009 ஆக இருந்தபோது 5 ஆம் மனுதாரர்/5 ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றம், பழனி சார்பு நீதிமன்றத்தல் நிலுவையில் இருந்த அ.வ.எண்.750/2022 (பழைய அ.வ.எண்.404/2019) மற்றும் அ.வ.எண்.1367/2022 (பழனி சார்பு நீதிமன்ற பழைய வழக்கு எண்.534/2018) ஆகிய வழக்குகளுடன் சேர்த்து நடத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டதின் காரணமாக மனுதாரர்கள் தரப்பில் மூன்று வழக்குகளில் சொல்லியுள்ள விபரங்கள் மற்றும் பொருண்மைகளையும் குறிப்பிட்டு புதிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் ஏற்கனவே மனுதாரர்கள் தரப்பில் பழைய வழக்கு எண்.54/2009–ம் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.1–இன் சாட்சியத்தை நீக்கறவு (Struck Off) செய்து உத்தரவிட்டும், புதியதாக தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று கூறியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல்வழக்கு எண்.1294/2022–இல் முதல்நிலை சாட்சியம் பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் வா.சா.1–இன் சாட்சியத்தை நீக்கறவு செய்வதற்கு எந்தவொரு வழிமுறைகளோ, முகாந்திரமோ இல்லை என்றும், மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1–இன் சாட்சியத்தை நீக்கறவு செய்து உத்தரவிட்டு, புதிய நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டியுள்ளது, விடுபட்ட பொருண்மைகளை பூர்த்தி செய்வதற்காகவே மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் அசல்வழக்கை இழுத்தடித்து காலம் கடத்துவதற்காகவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று கூறியுள்ளார். இந்நிலையில் மேற்கண்ட பொருண்மைகளை பரிசீலிக்கையில் அசல்வழக்கு எண்.1294/2022 (பழைய அசல்வழக்கு

எண்.54/2009)–இல் 5 ஆம் மனுதாரர்/5 ஆம் வாதி, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்கள் தரப்பில் மூன்று வழக்குகளும் ஒன்றாக சேர்ந்து விசாரிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளதால் மற்ற இரண்டு வழக்குகளில் சொல்லப்பட்டுள்ள பொருண்மைகளை குறிப்பிட்டும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட வா.சா.1–இன் சாட்சியத்தை நீக்கறவு (Struck off) செய்து உத்தரவிட வேண்டி மனுத்தாக்கல் செய்துள்ளார். ஆனால் மனுதாரர்கள் தரப்பில் என்னென்ன காரணங்களுக்காக வா.சா.1–இன் சாட்சியம் நீக்கறவு செய்ய வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் மற்ற இரண்டு வழக்குகளில் சொல்லப்பட்டுள்ள பொருண்மைகளை குறிப்பிட்டு கூடுதல் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்யக்கூடாது என்று மறுத்ததாக எந்தவொரு சாட்சியத்தை முன்னிலைப்படுத்தாத நிலையில் மனுதாரர்கள் மற்ற இரண்டு வழக்குகளில் சொல்லியுள்ள பொருண்மைகள் குறித்து கூடுதல் பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்வதை தவிர்த்துவிட்டு அசல்வழக்கு எண்.1294/2022–இல் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.1–இன் சாட்சியத்தில் விடுபட்ட பொருண்மைகளை பூர்த்தி செய்வதற்காகவும், அசல்வழக்குகளை இழுத்தடித்து காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர்கள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்தரப்பு வாதத்தை ஏற்றுக்கொள்ளும்வகையில் அமைந்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர்கள் மற்ற இரண்டு வழக்குகளில் சொல்லியுள்ள பொருண்மைகளை குறிப்பிட்டு கூடுதல் பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்படாததாலும், அசல்வழக்கு எண்.1294/2022–இல் 5 ஆம் மனுதாரர்/5 ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் பகுதியாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளதாலும் மனுதாரர்கள் மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வாறு பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**11.** இறுதியாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2023–ஆம் வருடம் ஜுன் மாதம் 12 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.06.12 17:14:12 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.

**<u>12. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்– இல்லை</u>**

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2023.06.12 17:14:17 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

I.A.No.192/2023 in
O.S.No.1294/2022
Sub Court, Oddanchatram.
12.06.2023
Order (Fair/Draft)